# அறிமுகம்

இலங்கையில் பதவியிலுள்ள ஜனாதிபதி முதல் தடவையாக மூன்றாவது தவணை ஜனாதிபதி பதவிக்காக கேட்கும் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இலங்கையில் ஜனவரி 8, 2015 அன்று நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தல், பதவியிலுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் இலங்கை சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் மற்றும் நவெம்பர் 2014 இல் எதிரணிகள் கூட்டணியின் ஒரு பொது வேட்பாளராக தன்னை அறிவிக்கும் வரை சுகாதார அமைச்சருமாகவிருந்த மைத்திரிபால சிறிசேனா ஆகிய இரு பிரதான வேட்பாளர்களுக்கு இடையிலானதாக உள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மதிப்பாய்வு ஆராய்ச்சிப் பிரிவான, சோஷல் இன்டிகேடர் 1999 இல் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து தேர்தல் அபிப்பிராய வாக்கெடுப்புகளை நடாத்தியுள்ளது. தேர்தல் அபிப்பிராய வாக்களிப்புகள் அரசியல் மற்றும் ஆட்சிமுறைமை நோக்கிய பிரஜைகளின் மனப்பாங்குகளுடன் இணைந்த காரணிகளை இனங் காண்பதற்கான ஒரு வாய்ப்பாகும் என்பதோடு வாக்காளர்களுக்கு என்ன தேவை மற்றும் நாட்டின் தற்போதைய பிரச்சினைகளைக் கையாள்வதில் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளிடமிருந்து அவர்கள் எதனை எதிர்பார்க்கிறார்கள் என்பதன் சிறந்த புரிந்து கொள்ளுதலுடன் சிவில் சமூகங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகிய இரண்டுக்கும் அறிவிக்கும் ஒரு பொறிமுறையாகவும் அது செயற்பட முடியும். அத்தோடு அவை, வேட்பாளர்கள், அவர்களது சம்பந்தப்பட்ட கட்சிகள் மற்றும் செல்வாக்கான குழுக்கள் என்பன அவற்றின் விஞ்ஞாபனங்கள் மற்றும் எதிர்காலத் தேசிய மூலோபாயங்கள் என்பவற்றை வடிவமைப்பதற்கு வேட்பாளர்களுக்கு அறியத்தரும் அதேவேளை, தங்களது தேவைகள் மற்றும் அபிலாசைகள் என்பவற்றுக்காக குரல் கொடுப்பதற்கு சமூகங்களையும் வலுப்படுத்துகின்றன.

தேர்தல் பெறுபேறுகளை எதிர்வு கூறும் அதன் திறனின் காரணத்தினால் அபிப்பிராய வாக்கெடுப்புகள் பிரபல்யமானவையாக உள்ளன. எவ்வாறாயினும், இந்த வாக்கெடுப்பின் குறிக்கோள் தேர்தல் பெறுபேறுகளை எதிர்வு கூறாது ஆனால் பிரஜைகள் கரிசனை கொண்ட விடயங்கள் மற்றும் பரப்புரைக் காலங்களின் போது கலந்துரையாடப்படுகின்ற முக்கியமான விடயங்கள் மீதான அவர்களது அபிப்பிராயங்கள் என்பவை பற்றி வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளுக்கு தெரியப்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன.

# முறைமையியல்

இந்த நாடு முழுவதுமான அபிப்பிராய வாக்கெடுப்பு இலங்கையின் அனைத்து 25 மாவட்டங்களிலும் நடாத்தப்பட்டது. ஒரு கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தினை உபயோகித்து, 2000 பதிலிறுப்பாளர்களைக் கொண்ட ஒரு மாதிரியில் நேருக்கு நேராக நேர்காணல்கள் நடாத்தப்பட்டன, அவற்றுள் 1999 நேர்காணல்கள் முழுமையான நேர்காணல்களாக கருதப்பட்டன.

இந்த அபிப்பிராய வாக்கெடுப்பில், சோஷல் இன்டிகேடார் ஒரு பல்படி நிலையில் அடுக்குகளாக்கப்பட்ட எழுந்தமான மாதிரி நுட்பத்தைப் பயன்படுத்தியது. மாதிரியின் அளவு ஒரு 2% வழு ஒதுக்குக்கு உட்பட்டதாக 95% நம்பிக்கை மட்டத்தில் பெறுபேறுகளை உருவாக்கும் முகமாகவும் மற்றும் உத்தேசிக்கப்பட்ட பகுப்பாய்வுக்கு அவசியமான வேறுபாடுகளுக்கு இடமளிக்கும் வகையிலுமாகத் தீர்மானிக்கப்பட்டது. 2000 பதிலிறுப்பாளர்களின் பரம்பல் ஒரு மாதிரி மக்கட்தொகை விகிதாசார மாதிரியை (PPS) உபயோகித்து அனைத்து மாவட்டங்கள் முழுவதிலும் வாக்களிக்கப்பட்டது. இனத்துவ விகிதாசாரமும் கணக்கில் கொள்ளப்பட்டது. மாதிரியின் பரம்பலுக்காக தேர்தல் தொகுதிகள் அடுக்குகளாக தெரிவு செய்யப்பட்டதுடன் ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள வாக்களிப்பு மையங்கள் எழுந்தமான வகையில் தெரிவு செய்யப்பட்டன. ஒவ்வொரு வாக்களிப்பு மையத்தினுள்ளும் 2008 வாக்காளர் இடாப்பிலிருந்து ஆரம்ப நிலை தெரிவு செய்யப்பட்ட வேளையில் பதிலிறுப்பாளர்கள் வலது கை விதி மற்றும் கடைசிப் பிறந்த திகதி முறையைக் கொண்டு தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு வாக்களிப்பு மையத்திலும், ஒரு அதிக பட்சமாக 15 பதிலிறுப்பாளர்கள் நேர்காணப்பட்டனர்.

பகுப்பாய்வுச் செயன்முறையை ஆரம்பிப்பதற்கு முன், மதிப்பாய்வுத் தரவுத் தொகுதியில் உண்மையான புவியியல் மற்றும் இனத்துவ விகிதாசாரங்களைப் பிரதிபலிக்கும் முகமாக 2012 குடிசன மதிப்பீட்டு தரவுகளை உபயோகித்து தரவுத் தொகுதி கனப்படுத்தப்பட்டது.

# முக்கியமான சாராம்சம்

- தேர்தல்களின் காலங்களை அப்பாற்படுத்தி, 14.5% இலங்கையர்கள் பொதுவாக அரசியல் மற்றும் பொது விடயங்களில் ஒரு கூடுதலான ஆர்வத்தைக் கொண்டுள்ளதாகத் தெரிவித்த வேளையில் அநேகம் 50% ஆனவர்கள் ஏதோவொரு வகையிலான ஆர்வங் கொண்டிருப்பதாகத் தெரிவித்தனர். 34.6% ஆனவர்கள் தாங்கள் எந்த விதமான ஆர்வமும் கொண்டிருக்கவில்லையெனத் தெரிவித்தனர்.

- ஒரு பெரும்பாலான இலங்கையர்கள் (86.9%) தங்களது வாக்கு ஒரு தேர்தலின் முடிவில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த முடியுமென நம்புகின்றதுடன், 47.9% ஆனவர்கள் அதனுடன் உறுதியாக இணங்குவதாகத் தெரிவிக்கின்றனர். தங்களது வாக்கு ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த முடியுமென்பதுடன் இணங்குவது சிங்களவர்கள் மத்தியில் (89.9%) உயர்ந்த பட்சமாகவும் மற்றும் தமிழ்ச் சமூகத்தில் குறைந்தபட்சமாக (74.6%) ஆகவும் இருந்தது.

- இலங்கையர்கள் தேர்தல் தொடர்பான தகவல்களைப் பெறும் முதல் மூன்று மூலங்களாக தொலைக்காட்சி (44.4%), வானொலி (18%) மற்றும் செய்தித்தாள்கள் (15.8%) உள்ளன.

- அதிகம் பார்க்கப்படும் முதல் மூன்று தொலைக்காட்சி அலைவரிசைகளாக ஹிரு (20.1%), ஐ.ரி.என் (20%), மற்றும் சிரச (16.8%) உம், அதிகம் விரும்பும் முதல் மூன்று வானொலி நிலையங்களாக ஹிரு. எஃ. எம் (23.4%), சிரச எஃ. எம் (17%), மற்றும் சூரியன் எஃ. எம் (13.9%) ஆகவும் மற்றும் அதிகம் வாசிக்கப்படும் மூன்று செய்தித் தாள்களாக லங்காதீப (46.8%), வீரகேசரி (13.9%) மற்றும் திவயின (7.6%) ஆகவும் இருந்தன.

- தேர்தல் பரப்புரைக் காலங்களின் போதும் கலந்துரையாடப்படுகின்ற இலங்கையின் முக்கியமான விடயங்களின் ஒரு பட்டியலில் இருந்து இலங்கையர்கள் மிக முக்கியமானதாகக் கருதும் முதல் மூன்று விடயங்கள் வாழ்க்கைச் செலவு (32.2%), வேலை வாய்ப்புகள் (12.9%) மற்றும் கல்வி (9.8%) என்பவையாகும்.

- சிங்கள சமூகத்தவர்களுக்கு மிக முக்கியமான மூன்று விடயங்கள் வாழ்க்கைச் செலவு (34%), வேலை வாய்ப்புகள் (12.4%) மற்றும் பாதுகாப்பு (10.9%). தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை, மலைநாட்டுத் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கான முக்கியமான விடயங்கள் வாழ்க்கைச் செலவு, கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் எனும் ஒழுங்கில் உள்ளன.

- தங்களது வேட்பாளரைத் தெரிவு செய்யும் போது, மிக முக்கியமான குணவியல்புகளாக இலங்கையர்கள் கவனத்தில் கொள்வது வேட்பாளர் கல்வியறிவு பெற்றவராக இருத்தல், அவர்கள் ஊழல்களில் ஈடுபடாதவராக இருப்பதையும் மற்றும் அவரது தலைமைத்துவப் பண்புகளையுமாகும்.

- 2015 ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதும் மற்றும் நீதியானதுமாக இருக்குமென 40.3% ஆனவர்களும் சுதந்திரமானதும் மற்றும் நீதியானதுமாக இருக்கலாமென 21.5% ஆன இலங்கையர்களும் நம்பிக்கை கொண்டுள்ளனர். 12.7% இலங்கையர்கள் மட்டும் அது சுதந்திரமானதும் மற்றும் நீதியானதுமாக இருக்குமென தாங்கள் நினைக்கவில்லை எனத் தெரிவிக்கின்ற வேளையில் 25.6% ஆனவர்கள் தங்களுக்கு என்ன கூறுவதெனத் தெரியவில்லை எனக் கூறினர்.

- இந்த சந்தர்ப்பத்தில் ஜனதிபதித் தேர்தல் அவசியம் என அநேகம் 50% ஆன இலங்கையர்கள் நம்புகின்ற வேளையில் 29.7% ஆனவர்கள் அது அவசியமில்லை என எண்ணுகின்றனர். நான்கு பிரதான இனச்

சமூகங்களான, மலைநாட்டு தமிழ்ச் சமூகத்திலிருந்து 67.5% ஆனவர்களும், முஸ்லிம் சமூகத்திலிருந்து 62.5% ஆனவர்களும், சிங்கள சமூகத்திலிருந்து 47.1% ஆனவர்களும் மற்றும் தமிழ் சமூகத்திலிருந்து 46% ஆனவர்களும் ஒரு ஜனாதிபதித் தேர்தல் அவசியம் என எண்ணுகின்றனர்.

- ஒரு ஜனாதிபதி சேவையாற்றுவதற்கு அவரது பிரபல்யத்தைக் கவனத்தில் கொள்ளாது பதவிக் காலத்தை ஒரு அதிகபட்சமாக இரண்டு தவணைக்கு, அரசியலமைப்பு மட்டுப்படுத்த வேண்டுமா எனக் கேட்ட பொழுது, 48.4% ஆன இலங்கையர்கள் அது இரண்டு தவணைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படல் வேண்டுமெனத் தெரிவித்ததுடன், 24.8% ஆனவர்கள் அதனுடன் உறுதியாக இணங்கிக் கொள்வதாகத் தெரிவித்தனர்.

- முஸ்லிம் சமூகத்தின் பெரும்பான்மையானவர்கள் (70.1%) அது இரண்டு தவணைகளுக்கு மட்டும் மட்டுப் படுத்தப்படல் வேண்டுமென்பதில் இணங்கிக் கொண்டதோடு அநேகம் 50% ஆனவர்கள் அதனுடன் உறுதியாக இணங்குவதாக தெரிவித்தனர். சிங்கள சமூகத்திலிருந்து 43.6% ஆனவர்கள் மட்டுமே ஒரு ஜனாதிபதியின் சேவையாற்றுதலை அதிகபட்சமாக இரண்டு வருடங்களுக்கு மட்டுப்படுத்தவதுடன் இணங்கிக் கொண்டனர்.

- இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதில் 39.9% இலங்கையர்கள் சார்பாக இருந்த வேளை, 30.9% ஆனவர்கள் தங்களுக்குத் தெரியாது எனவும் மற்றும் 29.3% ஆனவர்கள் தாம் அதற்கு சார்பானவர்களாக இல்லையெனவும் தெரிவித்தனர்.

- நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு பெரும்பாலும் சிங்களச் சமூகமே சார்பாக இருக்கவில்லை. 35.6% ஆனவர்கள் தாங்கள் சார்பாக இல்லை என்ற வேளையில் தமிழ்ச் சமூகத்திலிருந்து 8.4 % ஆனவர்களும், மலைநாட்டுத் தமிழர்களில் இருந்து 14.3% ஆனவர்களும் மற்றும் முஸ்லிம் சமூகத்திலிருந்து 9.2% ஆனவர்களும் இதே கருத்தை தெரிவித்தனர்.

- ஒரு மாகாண மட்ட நோக்கிலிருந்து பார்க்கையில், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான உயர்ந்தபட்ச ஆதரவு கிழக்கு (60.1%) மற்றும் வடக்கு (57.1%) மாகாணங்களிலிருந்து வந்தது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதில் சார்பற்றதான நிலை சப்பிரகமுவ (53.1%) மற்றும் மேற்கு (36.9%) மாகாணங்களிலிருந்து பிரதானமாக வெளிப்பட்டது.

*குறிப்பு: எதிர்வரும் தேர்தலுடன் நேரடியாக கையாளும் கேள்விகளுக்கான 'தெரியாது/நிச்சயமில்லை' போன்ற அதிக எண்ணிக்கையிலான பதில்கள் அல்லது நிறைவேற்று ஜனாதிபதி முறைமைய ஒழித்தல் போன்ற முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்படுதல் என்பன இந்த அறிக்கையை வாசிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.*

*Full report - http://www.cpalanka.org/presidential-election-2015-pre-election-opinion-poll-top-line-report/*